Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம் ௵ அக்டோபர் ௴ 17 ௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 31

## இத்தாலியில் யுத்த களைப்பும் அதைரியமும்

### ஜெர்மனிக்கு விரோதமான உணர்ச்சி

### கூட்டாளிக்குப்பதிலாக அடிமையாக நடத்தப்படும் நிலைமை

### இத்தாலிய மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்

இத்தாலி, ஜெர்மனிக்குக் கூட்டாளியாயிருக்கும் நாடு. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இந்த மூன்று நாடுகளும், ஒன்றுக்கொன்று உதவி செய்து கொள்வது என்று ஒப்பந்தம் செய்துகொண்டன. இதற்கு அச்சு ஒப்பந்தம் என்று பெயர். அந்த ஒப்பந்தத்தின் கீழ், இத்தாலியிடம் எவ்வளவு உதவி பெறமுடியுமோ, அதற்கு மேலும் ஜெர்மனி உதவி பெற்றிருக்கிறது. இதனால், இத்தாலியினுடைய பலம் குறைந்து, இப்போது அது கஷ்டமான நிலைமையில் இருக்கிறது.

16 மாதங்களாக இத்தாலி யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. முடிவில், ஒவ்வொரு விஷயத்துக்கும் ஜெர்மனியை எதிர்பார்க்கிற நிலைமை இத்தாலிக்கு உண்டாயிருக்கிறது. யுத்த சாமான்கள் முதல் கொண்டு உணவுப் பொருள்கள் வரையில் எல்லாம் ஜெர்மனி கொடுத்தால்தான் உண்டு என்ற பரிதாபகரமான நிலைமையில் இத்தாலி இப்போது இருந்து வருகிறது.

இத்தாலிக்கு வட ஆப்பிரிக்காவில் சில பிரதேசங்கள் இருந்தன. அதை இத்தாலியின் ஏகாதிபத்தியம் என்று கூறுவது வழக்கம். இந்த ஏகாதிபத்தியம் இத்தாலியின் தோல்விகளினால் அடியோடு அழிக்கப்பட்டது. 6 வருஷங்களுக்குமுன், அபிசீனியா என்ற நாட்டை அநியாயமாக இத்தாலி கைப்பற்றியது. அந்த நாட்டிலிருந்த இத்தாலிய சேனைகள் கொல்லப்பட்டும் துரத்தப்பட்டும், இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. அபிசீனியா பிரிட்டிஷாராலும், நேச தேசத்தினராலும் கைப்பற்றப்பட்டது. பழைய அபிசீனியச் சக்கிரவர்த்தியான ஹெயிலி செலாசிக்கு அபிசீனிய நாடு ஒப்படைக்கப்பட்டது. பிரிட்டிஷ் சோமாலிலாந்து பிரதேசத்தை இத்தாலி கைப்பற்றியிருந்தது. அந்தப் பிரதேசமும் இத்தாலியிடமிருந்து திரும்பக் கைப்பற்றப்பட்டது. சிரிநெய்காவில் இருந்த ஏராளமான இத்தாலியத் துருப்புகள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டன. ஜெனரல் வேவல் என்ற பிரிட்டிஷ் தளகர்த்தருடைய சாமர்த்தியத்தினால் இத்தாலி தோற்கடிக்கப்பட்டது. இந்தத் தோல்வியில் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இத்தாலியர்கள் இப்போது இந்தியாவில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். சிரிநெய்காவின் மத்தியிலுள்ள தோப்ரூக் என்ற கோட்டை இந்தியப் படைகளாலும், இதர நேசதேசப்படைகளாலும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதைக் கைப்பற்றுவதற்கு அச்சு நாட்டுத் துருப்புகள் கடுமையாகப் பிரயத்தனம் செய்கின்றன. ஆனால், அவர்களுடைய பிரயத்தனம் நிறைவேறாமல் இருக்கிறது.

### இத்தாலியும், மத்தியதரைக் கடலும்

மத்தியதரைக் கடலை, "இத்தாலியின் ஏரியாக்குவேன்" என்று இத்தாலியின் சர்வாதிகாரி, முசலோனி, ஜம்பமாக கூறினார். அந்த மத்தியதரைக் கடலில், இத்தாலியின் கப்பல் பலத்தை பிரிட்டிஷார் முழுவதும் ஒடுக்கிவிட்டனர். பிரிட்டிஷ் கப்பல் பலம்தான் மத்தியதரைக் கடலில் இப்போது சிறந்து விளங்குகிறது. சாமான்கள் கொண்டுபோகும் கப்பல்களுக்குப் பாதுகாப்பாகப் போகும் இத்தாலியக் கப்பல்களையும், ஜெர்மன் கப்பல்களையும், பிரிட்டிஷ் கப்பற்படை முழுகடித்துக்கொண்டு வருகிறது. இத்தாலியின் முக்கியமான தொழிற்சாலைப் பட்டணங்களையும், ராணுவ லட்சியங்களையும், பிரிட்டிஷ் விமானங்களும், தென்னாப்பிரிக்கா விமானங்களும் வெடிகுண்டுகளால் தாக்கிக்கொண்டு வருகின்றன. இத்தாலி சண்டை போட்டபோதெல்லாம், தோல்விதான் அடைந்துகொண்டு வந்திருக்கிறது. கிரீசிலும், அல்பேனியாவிலும், இத்தாலி திக்குமுக்காடிப்போய் கடைசியில் ஜெர்மனியினுடைய உதவியைக் கேட்கும்படி நேரிட்டது.

இந்த காரணங்களினால், இத்தாலிக்கு யுத்தக் களைப்பு ஏற்பட்டிருக்கிறது. நாட்டு மக்களும் அமைதியில்லாமல் இருக்கிறார்கள். உணவுப்பொருள்கள் குறைந்துபோய்விட்டன. விலைவாசிகள் அநேக மடங்கு உயர்ந்துவிட்டன. பொருளாதார நிலைமை கேவலமாய்விட்டது. இத்தாலியின் நாணயத்துக்கு இருந்த கொஞ்ச மதிப்புகூட போய்விட்டது. ஜெர்மனிக்கு விரோதமான உணர்ச்சி நாட்டில் பரவியிருக்கிறது. சிசிலி என்ற இத்தாலியத் தீவில், ஜெர்மனிக்கு விரோதமாக சில கலகங்கள் நடந்தன. ஜெர்மனிக்காக யுத்த சாமான்கள் செய்யும் சில தொழிற்சாலைகளை இத்தாலியர்கள் தகர்த்து நொறுக்கிவிட்டார்கள்.

இத்தாலியினுடைய உண்மையான நிலைமையை இத்தாலிய மக்கள் இப்போது நன்றாகத் தெரிந்து கொண்டார்கள். பெயரளவுக்கு இத்தாலி, ஜெர்மனியினுடைய கூட்டாளிதான்; ஆனால் உண்மையில் ஜெர்மனியினுடைய அடிமையாக இத்தாலி இருக்கிறது. சில விஷயங்களால் இந்த உண்மை விளக்கமாகப் புலப்பட்டிருக்கிறது. அவை பின்வருமாறு:—

### அடிமைத்தனத்தின் உண்மை

யுத்தத்தில் பிரவேசிப்பதற்கு முன், இத்தாலி சில பிரதேசங்களைக் கைப்பற்ற நினைத்திருந்தது. அந்தப் பிரதேசங்களில் ஒன்றுகூட அதற்குக் கொடுக்கப்படவில்லை. எல்லாம் ஜெர்மனி தன்னுடைய அதிகாரத்தின்கீழ் வைத்துக்கொண்டது. ஆப்பிரிக்காவில் உள்ள பிரஞ்சுப் பிரதேசங்களை இத்தாலியின் மேற்பார்வையில் விட்டிருக்கலாம். ஜெர்மனி அப்படி செய்யவில்லை. ஹங்கேரி என்ற நாட்டுக்கும் இத்தாலிக்கும் அதிககாலமாகத் தொடர்பு இருந்தது. நியாயமாக, ஹங்கேரியை இத்தாலியின் மேற்பார்வையில் வைத்திருக்கவேண்டும். ஆனால் ஜெர்மனி ஹங்கேரியைத் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ் வைத்துக்கொண்டது.

ஜெர்மனியும், தெற்கு பிரான்சில் உள்ள விஷி அரசாங்கமும் சேர்ந்து சில ஒப்பந்தப்பேச்சுகள் நடத்திக்கொண்டிருந்தன. அவைகளில் ஒன்றுக்காவது இத்தாலியைக் கூப்பிடவேண்டுமென்று எண்ணமில்லை. இத்தாலி கூட்டாளியாய் இருந்தால் அதனுடன் கலந்துதானே எல்லாம் செய்யவேண்டும்? ஜெர்மனி அம்மாதிரி செய்யவில்லை.

ஜெர்மனி தன்னுடைய ராணுவ பலத்தினால் இத்தாலியை அடக்கிவைத்திருக்கிறது. சென்ற டிசம்பர் ௴ 50,000 ஜெர்மன் துருப்புகள் இத்தாலியின் இரண்டு துறைமுகங்களில் வந்து சேர்ந்தன. சென்ற ஜனவரி ௴ சில ஜெர்மன் துப்பாக்கிப் படைகளும், தரைப்படைகளும் இத்தாலி வழியாக லிபியாவுக்குச் சென்றன. இத்தாலியில் ஜெர்மன் துருப்புகளுக்குத் தாராளமாகப் போவதற்கு சௌகரியங்கள் உண்டு.

மார்ஷல் படாகிளியோ என்ற பிரபல இத்தாலிய தளகர்த்தர் ராஜிநாமா செய்ததற்குச் சில காரணங்

கள் உண்டு. அதில் இத்தாலியில் ஜெர்மன் துருப்புகள் அதிகமாக வந்திருப்பது ஒரு காரணம்.

## பொருளாதார அடிமைத்தனம்.

பொருளாதார விஷயத்திலும், இத்தாலி ஜெர்மனிக்கு அடிமையாய்விட்டது. இத்தாலிக்கு வேண்டிய பொருள்களை ஜெர்மனி கொடுத்தால்தான் உண்டு; இத்தாலிக்கு வேறுவித மார்க்கம் ஒன்றும் இல்லை. இத்தாலிக்குப் பெட்ரோல் எண்ணெய் அவசியம் வேண்டியிருந்தது. ஆனால் பெட்ரோல் எண்ணெய் அதிகமாக இருந்த ருமேனியாவை ஜெர்மனி கைப்பற்றிக்கொண்டது. ஜெர்மனி இஷ்டப்பட்டு ஏதாவது கொடுத்தால்தான் இத்தாலிக்குப் பெட்ரோல் கிடைக்கும். இதல்லாமல நிலக்கரி, இரும்பு, மரம், துத்தநாகம் முதலிய பொருள்களை இத்தாலி ஜெர்மனியிடமிருந்துதான் வாங்க வேண்டும். ஜெர்மனியும், இத்தாலியும் விவசாய சம்பந்தமாக சில ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருக்கின்றன. ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களைப்போல எல்லா நிபந்தனைகளும், இத்தாலிய ஒப்பந்தங்களிலும் இருக்கின்றன. இத்தாலியத் தொழிலாளர்கள் வேலை செய்வதற்காக ஜெர்மனிக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கே அடிமைகளைப்போல நடத்தப்படுகிறார்கள்.

இத்தாலி எவ்வளவுதூரம் ஜெர்மனிக்கு அடிமையாய்விட்டது என்பது மற்றொரு விஷயத்தால் நன்றாகத் தெரியவரும். இத்தாலியில் எங்கு பார்த்தாலும் "கெஸ்டாபோ" என்ற ஜெர்மன் ரகசியப் போலீசின் வலை வீசப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திலும், தொழிற்சாலைகளிலும், பொருளாதாரத்திலும் முக்கியமான வேலைகளில் ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்கள் அமர்ந்திருக்கிறார்கள். லிபியாவில் இத்தாலி தோல்வியடைந்தபோது இத்தாலிய அரசாங்கம் தத்தளித்துக்கொண்டிருந்தது. அப்போது அரசாங்க அதிகாரத்தை ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்கள் தந்திரமாகக் கைப்பற்றிக்கொண்டார்கள்.

இப்படி பல விதங்களிலும் ஜெர்மனி இத்தாலியைக்கூட தன்னுடைய அடிமை நாடாக்கிவிட்டது. இத்தாலியின் சர்வாதிகாரி, முசலோனி தன்னுடைய அதிகாரத்தையும் கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டுமானால் அவருக்கு ஜெர்மானியர்களுடைய உதவியில்லாமல் முடியாது. முசலோனியின் பாசிஸ்டு கட்சியில் ஜெர்மனிக்கு விரோதமாக இருந்தவர்கள் எல்லோரும் அப்புறப்படுத்தப்பட்டார்கள். பால்போ, படாகிளியோ, கிரேசியானி, ஸ்டாரேஸ், செபாஸ்டியானி என்ற பிரபல இத்தாலிய தலைவர்கள் ராணுவ அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள், அல்லது ரகசியமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

## பீரங்கிகுண்டு பஞ்சம்.

ஜெர்மனிக்குக் கூட்டாளியாயிருந்தது போய் இத்தாலி இப்போது ஜெர்மனிக்கு ஒரு பாரமாய்விட்டது. இத்தாலியின் போர்த்திறமையெல்லாம் போய்விட்டது. பிரிட்டிஷ் விமானங்கள் இத்தாலியின்மேல் வெடிகுண்டுகளைப் போட்டால் அந்த விமானங்களைச் சுடுவதற்குப் பீரங்கிக்குண்டுகள் இத்தாலியிடம் அதிகமாக இல்லை. கூடிய சீக்கிரத்தில் வருகிற குளிர் காலத்தில் இராத்திரி நேரம் அதிகமாயிருக்கும் போது பிரிட்டிஷ் விமானங்கள் இத்தாலிய நகரங்களைக் கடுமையாகவும் ஓயாமலும் தாக்கப்போகின்றன. இப்போது இத்தாலி வைத்திருக்கும் பீரங்கிக் குண்டுகள் சீக்கிரத்தில செலவாய்விடும். அதற்குப் பின் இத்தாலியினுடைய நிலைமை மிகவும் மோசமாய் விடும்.

இத்தாலியின் தலை நகரமான ரோம் முதலிய முக்கிய பட்டணங்களை பிரிட்டிஷ் விமானங்கள் கடுமையாகத் தாக்காததற்குக் காரணம், அருகில் இருக்கும் "வாடிகன்" என்ற பட்டணத்தைச் சேதப்படுத்தக் கூடாது என்பது தான். "வாடிகன்" பட்டணத்தில் கத்தோலிக்க மதத் தலைவர், போப் இருக்கிறார். உலகத்திலுள்ள எல்லா கத்தோலிக்கர்களுக்கும் அவர் தான் பிரதம குரு. அவர் இந்த சண்டையில் நடு நிலைமை வகித்திருக்கிறார். தான் "வாடிகனில்" இருப்பதால், ஒரு கட்சிக்கு உதவிசெய்வது போலாகிறது என்று நினைத்து அவர் "வாடிகன்" பட்டணத்தைவிட்டு வெளியே போய்விடுவார் என்று சொல்லப்படுகிறது. இத்தாலியர்கள் லண்டன் நகரத்தின் மேல் வெடிகுண்டு போடும்போது, பிரிட்டிஷார் ரோம் நகரத்தின்மேல் வெடிகுண்டு போடுவதைத் தடுப்பதற்கு தான் காரணமாயிருக்கக்கூடாது என்பது போப் அவர்களுடைய அபிப்பிராயம்.

## சமாதான வதந்தி.

சமீபத்தில், போப் அவர்களைப் பார்ப்பதற்காக அமெரிக்கத் தலைவர், மிஸ்டர் ரூஸ்வெல்ட், ஒரு தூதரை அனுப்பியிருந்தார். அவர் போப் அவர்களுடன் கலந்து பேசியதிலிருந்து இத்தாலி தனியாக சமாதானம் செய்துகொள்ள விரும்புகிறது என்று ஒரு வதந்தி உலாவுகிறது. இத்தாலிக்கு இனிமேல் யுத்தம் நடத்த இஷ்டமில்லை. யுத்தம்செய்து, இப்போது மிகவும் களைத்திருக்கிறது; மனோதைரியமும் குறைந்திருக்கிறது. ஆனால் இத்தாலி சமாதானம் செய்துகொள்ள ஜெர்மனி இடங்கொடுக்காது. இத்தாலியில் அமைதி குலைந்திருக்கிறது. அதைரியம் அதிகப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், அது சமாதானம் செய்துகொள்வதற்கு சௌகரியமில்லாமல் இருக்கிறது. எது எப்படியிருந்தாலும், வடக்கு ஆப்பிரிக்காவில் நடக்கும் சண்டை ஒருவிதமாய் முடிகிற வரைக்கும் இத்தாலி ஒன்றும் செய்யாது. ஆனால், இத்தாலியின்பலம் இன்னும் குறையும்படி பிரிட்டிஷார் செய்துகொண்டே வரவேண்டும்.

# நாஸிகளும், விஞ்ஞான சாஸ்திரமும்

## சர்வகலாசாலைப் புத்தகங்கள் கொளுத்தப்பட்டன

### உபாத்தியாயர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள்

"சயன்ஸ்" என்றால் விஞ்ஞான சாஸ்திரம் என்று அர்த்தம். மின்சாரசக்தி, ரயில் வண்டி, ரேடியோ முதலிய நூதனங்கள் விஞ்ஞான சாஸ்திரத்தைச் சேர்ந்தவை. இந்த சாஸ்திரத்தை ஜெர்மனி பலவழிகளில் அபிவிருத்திசெய்து வந்தது. 100 வருஷங்களுக்கு முன்னிருந்து விஞ்ஞான சாஸ்திரத்தில் பலவித ஆராய்ச்சிகளைச் செய்தது. இதனால் விஞ்ஞான சாஸ்திரத்தில் கெட்டிக்காரர்கள் பலர் ஜெர்மனியில் தோன்றினார்கள். அவர்கள் சாஸ்திர நிபுணர்களாய் இருந்தார்கள். அவர்களிடம் படிப்பதற்காக உலகத்தின் பல பாகங்களிலிருந்து மாணாக்கர்கள் வந்தார்கள். இதுமாத்திரமல்லாமல், பிரிட்டனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் விஞ்ஞான சாஸ்திரத்தில் கெட்டிக்காரர்கள்கூட ஜெர்மனிக்குப் போனார்கள். ஜெர்மனியின் சர்வகலாசாலைகளில் தங்களுடைய படிப்பை முடிப்பதை ஒரு பெருமையாக நினைத்தார்கள். ஜெர்மனியின் விஞ்ஞான சாஸ்திர சாலைகளில் ஆராய்ச்சி செய்து அறிவை விருத்திசெய்துகொள்வது அப்போது ஒரு கௌரவமாக இருந்தது. ஏனென்றால், விஞ்ஞான சாஸ்திரத்தில் ஜெர்மனி நல்ல பேரெடுத்திருந்தது. அந்த சாஸ்திரத்தில் கெட்டிக்காரர்களாயிருந்த ஜெர்மானியர்கள் 40 பேருக்குமேல் "நோபெல் பிரைஸ்" என்ற உலகப் பிரசித்திபெற்ற பரிசுகளைப் பெற்றார்கள்.

சென்ற உலக மகாயுத்தத்திற்குப் பிறகு, ஜெர்மனியில் விஞ்ஞான சாஸ்திரம் அதிக சீக்கிரத்தில் விருத்தியடைந்தது. கணக்கு, சடசாஸ்திரம் ரசாயன சாஸ்திரம், உயிர்ப்பொருள் சாஸ்திரம் முதலியவைகளில் ஜெர்மனி மறுபடியும் பெரும்புகழ் பெற்றது. இந்த சாஸ்திரங்களில் பயிற்சி பெறுவதற்காக உலகத்தின் பல பாகங்களிலிருந்து மாணவர்கள் அங்குவர ஆரம்பித்தார்கள். ஆனால், நூறு வருஷத்துக்கு மேல் பிரசித்திபெற்ற ஜெர்மனி சில வாரங்களுக்குள் தன்னுடைய நல்ல பெயரைக் கெடுத்துக்கொண்டது.

## சாஸ்திரமும், கட்சியும்.

விஞ்ஞான சாஸ்திரம் உலகத்துக்கே பொதுவான சாஸ்திரம் என்பதை மாற்றி, ஜெர்மனி தனக்கு மாத்திரம் உபயோகமாகும்படி அதைச் செய்துவிட்டது. பர்லின் சர்வகலாசாலையின் அதிகாரி ஒருவர் ஜெர்மன் பட்டாள உடையை உடுத்திக்கொண்டு பிர

சங்கம் செய்தார். சடசாஸ்திரத்தில் நிபுணராயிருந்த ஒருவர் தாம் எழுதிய புத்தகத்தை அடியோடு மாற்றி, புதிய ஜெர்மன் உணர்ச்சிக்குத் தகுந்த மாதிரி வேறொரு புத்தகத்தை எழுதினர். விஞ்ஞான சாஸ்திரம் மதம், வகுப்பு, மனிதவர்க்கம் இவைகளுக்கு மேற்பட்டது என்ற உணர்ச்சி போய் விட்டது. சாஸ்திரம் நாசிக்கட்சிக்குத் தகுந்த மாதிரி அமைக்கப்படவேண்டும் என்ற கொள்கை ஜெர்மனியில் பரவிவிட்டது.

இந்தக் கொள்கைக்கு உடன்படாத உபாத்தியாயர்களும், பேராசிரியர்களும் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். ஹீடல்பர்க் தத்துவ சாஸ்திர இலாகாவில் இருந்த உபாத்தியாயர்களில் பாதி பேர் இம்மாதிரி வேலையை இழந்துவிட்டார்கள். இது 1936-ம் வருஷம் நடந்தது.

1932-ம் வருஷம், கொட்டிஞ்சன் சர்வகலாசாலை விஞ்ஞான சாஸ்திர இலாகா உலகத்திலேயே சிறந்த விஞ்ஞான சாஸ்திர நிபுணர்களைக்கொண்டிருந்தது. 1933-ம் வருஷம், 238 உபாத்தியாயர்களில் 52 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். ஹிட்லருடைய நாஸிக்கட்சியின் கொள்கைக்கு அனுகூலமாக விஞ்ஞான சாஸ்திரத்தை உபயோகப்படுத்த மறுத்ததே அவர்கள் செய்த குற்றம். மற்ற உபாத்தியாயர்கள் நாஸிக்கட்சியின் தலைவர்கள் சொன்னமாதிரி நடந்தார்கள். சர்வகலாசாலையில் நாஸிக்கொள்கைக்கு விரோதமாக உள்ள ஏராளமான புத்தகங்களை எல்லாம், ஹிட்லரின் உத்தரவின்படி நெருப்புவைத்துக் கொளுத்திவிட்டார்கள்.

1933-ம் வருஷத்திலிருந்து 1937-ம் வருஷம் வரைக்கும், ஜெர்மனியில் உள்ள சர்வகலாசாலை ஆசிரியர்கள் நான்கில் ஒரு பாகம் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். இம்மாதிரி நீக்கப்பட்டவர்கள் சுமார் 2,500 விஞ்ஞான நிபுணர்கள். இதன் பிறகு சர்வகலாசாலையில் படிக்கும் மாணுக்கர்கள் 1,16,000-லிருந்து 67,000-க்கு குறைந்துவிட்டார்கள்.

ஜெர்மனியின் ராணுவ பலத்துக்கு உதவியாயிருக்கும் சாஸ்திரங்கள் விருத்திசெய்யப்பட்டன. உதாரணமாக, ஆகாய விமான யந்திர சாஸ்திரம், வெடிகுண்டு மருந்து சாஸ்திரம் முதலியன அபிவிருத்தி செய்யப்பட்டன. மற்றவைகள் கைவிடப்பட்டன.

கல்வி விஷயத்தில் இந்தப் பெரிய மாறுதலைச் செய்தவர் ஹிட்லருடைய கல்வி மந்திரியாகிய டாக்டர் ரஸ்ட் என்பவர். இவர் சாஸ்திரங்களை யுத்தத்திற்காக உபயோகப்படுத்தவேண்டும் என்ற கொள்கையையுடையவர். கல்வியை நாஸிக்கட்சிக்கு உதவியாக உபயோகப்படுத்தி, அதன் உண்மையான நோக்கங்களை நாஸிகள் ஜெர்மனியில் பாழாக்கிவிட்டார்கள்.

# ரஷ்ய யுத்தத்தின் நிலைமை

## மாஸ்கோவைப் பிடிக்க பிரம்மாண்டமான போர்

### மழைக்கால நெருக்கமும், ஜெர்மனியின் அசௌகரியங்களும்

### ரஷ்யாவுக்கு 30,000 பிரிட்டிஷ் டாங்கிகள்

ரஷ்யா ஒரு பிரம்மாண்டமான பிரதேசம். ஐரோப்பா—ஆசியா கண்டங்களின் வடக்கில் ஆயிரக்கணக்கான மைல்கள் விஸ்தீர்ணத்தில் ரஷ்யா பரவியிருக்கிறது. ரஷ்யாவும், ஜெர்மனியும் இப்போது கடுமையான போரில் இறங்கியிருக்கின்றன. இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் ஜெர்மனி ரஷ்யாவுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டது. யுத்தம் ஆரம்பித்து சுமார் 2 வருஷங்கள் ஆனதும், ஜெர்மனி யாதொரு எச்சரிக்கையும் இல்லாமல் ரஷ்யாவைத் திடீரென்று தாக்கியது. இந்த ஜெர்மன் ரஷ்யப்போர் சுமார் 4 மாதங்களாக நடக்கிறது. தெற்கு வடக்கில் 2,000 மைல் தூரமுள்ள போர் முனையில் நடக்கும் யுத்தம் மூன்று பிரிவுகளாக நடக்கிறது. வடக்கில் லெனின்கிராட் பிரதேசத்தில் ஜெர்மானியர்கள் அதிகமாக முன்னேற முடியவில்லை. தெற்கில் ஒடெஸ்ஸா, கிரைமியா பிரதேசங்களில், ரஷ்யத் துருப்புகள் ஜெர்மானியர்களைத் தடுத்து போர்புரிகின்றன. ஆனால் மத்தியப்பகுதியில், மாஸ்கோ பிரதேசத்தில் யுத்தம் கடுமையாக நடக்கிறது.

ரஷ்யாவின் தலை நகரமான மாஸ்கோவைப் பிடிப்பதற்காக, 17 நாட்களாக ஜெர்மானியர்கள் மும்முரமாகப் போர் புரிகிறார்கள். ஏராளமான துருப்புகளையும், யுத்த தளவாடங்களையும் இந்தப் போரில் உபயோகிக்கிறார்கள். எவ்வளவு சேதமடைந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை; மாஸ்கோவைப் பிடிக்கவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம். மழைக்காலத்துக்குமுன் மாஸ்கோ ஜெர்மானியர்கள் கையில் இருக்கவேண்டுமென்பது ஹிட்லருடைய எண்ணம். மழைக்காலம் வந்துவிட்டதால் யுத்தம் நின்றுபோகாது; ஆனால் படையெடுத்த பட்டாளத்துக்கு மழைக்காலத்தில் அநேக அசௌகரியங்கள் இருக்கின்றன. பின்னால் இருக்கும் ராணுவத்தளங்களிலிருந்து முன்னணியில் சென்றிருக்கும் படைகள் வரைக்கும், போக்குவரத்து சாதனங்களை தொடர்ச்சியாக வைத்திருக்க வேண்டும். இப்போது ரஷ்யாவில் பனிக்கட்டி விழ ஆரம்பித்துவிட்டது. நவம்பர் மாதம் 15 தேதிக்குள் ரஷ்யா முழுவதும் கடுமையான குளிர் பிரதேசமாக மாறி விடும். அதுவரைக்கும் ரஷ்யத் துருப்புகள் சமாளித்துக்கொண்டு, ஜெர்மன் துருப்புக்களை எதிர்த்துக்கொண்டிருந்தால், மழைக்காலத்தில்கூட ஜெர்மானியர்கள் யுத்தம் செய்யும்படியான நிலைமை ஏற்படும்.

#### அதிக ராணுவ பலம்.

இப்போது ரஷ்யாவுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும், வருகிற வசந்தகாலத்தில், பிரிட்டனுடைய உதவியினாலும், அமெரிக்காவினுடைய உதவியினாலும், ஜெர்மானியர்களை எதிர்ப்பதற்கு அதிகமான ராணுவ பலம் உண்டாகும். மாஸ்கோவில் சமீபத்தில் மூன்று வல்லரசுகள் மகாநாடு நடந்தது. ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா, இந்த மூன்று நாடுகளும் ஹிட்லரிசத்தை எதிர்த்துப் போராடுவதில் எப்படி ரஷ்ய யுத்தத்தை நடத்துவது என்பதைப்பற்றி முக்கியமாக ஆலோசித்தன. அந்த மகாநாட்டுக்கு பிரிட்டிஷ் தூதுகோஷ்டியின் தலைவராகச் சென்ற பீவர் புரூக் பிரபு, ரஷ்யா ஏராளமான டாங்கிகள் வேண்டுமென்று கேட்டதாகவும், பிரிட்டனும், அமெரிக்காவும் அவைகளையும் இன்னும் இதர யுத்த சாமான்களையும் அனுப்புவதாகக் கூறியிருக்கின்றனவென்றும் தெரிவித்தார். பிரிட்டன் ரஷ்யாவுக்கு உதவி செய்வதில் கொஞ்சமும் தயங்காதென்றும், ஹிட்லருக்கு விரோதமாக மிகுந்த தைரியத்துடன் போர்புரியும் ஸ்டாலினுடைய எதிர்ப்பு பாதுகாக்கப்படும் என்றும் அவர் உறுதி கூறினர்.

ஸ்டாலின் என்பவர் ரஷ்யாவின் சர்வாதிகாரி. அவர் சமீபத்தில் ரஷ்யப்போர்முனைக்குச் சென்று நிலைமையைக் கவனித்திருக்கிறார். ஜெர்மானியர்களுடைய நோக்கத்தை நிறைவேறவொட்டாமல் ரஷ்யர்கள் தடுத்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை அவருக்குப் பலமாக இருக்கிறது. மத்தியப்பகுதியில் உள்ள ரஷ்யப்பட்டாளங்களை அழித்து, ரஷ்ய ராணுவ பலத்தை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்பது ஹிட்லருடைய நோக்கம். இந்த நோக்கத்தைத் தடுப்பதற்காக, சுமார் 30,000 டாங்கிகள் பிரிட்டனில் செய்து ரஷ்யாவுக்கு அனுப்பவேண்டுமென்று லார்டு பீவர் புரூக் தீர்மானித்திருக்கிறார். அமெரிக்காவும் இந்த சமயத்தில் ரஷ்யாவுக்கு அதிகமான உதவி அனுப்பத் தீர்மானித்திருக்கிறது. அது, வாடகையாகவும், கடனாகவும், யுத்த சாமான்களை ரஷ்யாவுக்கு கொடுப்பதற்காக வேண்டிய பணத்தை ஒதுக்கி வைத்திருக்கிறது.

#### நெருக்கடியான நிலைமை.

இதனால், ரஷ்யாவினுடைய நிலைமை நன்றாய்விட்டது என்று சொல்வதற்கில்லை. நிலைமை நெருக்கடியாகத்தான் இருக்கிறது. இன்னும் சில நாட்களில் மாஸ்கோ யுத்தத்தின் முடிவு ஒருவிதமாகத் தெரிந்துவிடும். ஜெர்மன் துருப்புகள் ஏராளமான யுத்த

தளவாடங்களுடன் மத்தியப்பகுதியில் கடுமையாகப் போர் புரிகின்றன. ஓரெல், வியாஸ்மா, பிரியான்ஸ்க் முதலிய இடங்களிலிருந்து ரஷ்யத்துருப்புகள் பின் வாங்கிச் சென்றுவிட்டன. மாஸ்கோவுக்கு 60 மைல் தூரத்தில் ஜெர்மன் துருப்புகள் வந்திருக்கின்றன.

ஆனால், ரஷ்யத்துருப்புகள் திருப்பித் தாக்குதலில் சில இடங்களில் வெற்றி பெற்றிருக்கின்றன. ஆகாய விமான பலத்தில் ஜெர்மனிக்கு இருந்த உயர்வு இப்போது குறைந்துபோய்விட்டது. அநேக புதிய ரஷ்யப்போர் விமானங்களும், வெடிகுண்டு விமானங்களும், இப்போது வந்திருக்கின்றன. பின்னால் இருக்கும் பயிற்சிபெற்ற 'ரிசர்வ்' ரஷ்யத்துருப்புகள் இப்போது யுத்த முனைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. ஒருவேளை மாஸ்கோ யுத்தத்தில் ஜெர்மனி ஜெயித்தாலும்கூட, அதனுடைய பெருவாரியான துருப்புச் சேதமும், தளவாடச்சேதமும் அதிககாலம் வரைக்கும் ஜெர்மனிக்கு பலக்குறைவை உண்டாக்கும் என்று அமெரிக்க நிபுணர்கள் கூறுகிறார்கள்.

தெற்குக் கோடியில், அசோவ் கடல் யுத்தம் முடிந்துவிட்டதாக ஜெர்மனி சொல்லுகிறது. ஆனால் இதை நம்புவதற்கில்லை. இருந்தாலும், கிரைமியாவிலும், காகசஸ் பிரதேசத்திலும் நிலைமை சற்று நெருக்கடியாக இருக்கிறது. மத்தியப்பகுதியில் எதிரத்துப் போராடுவதைப்போல, இந்தப் பகுதியிலும் ரஷ்யத்துருப்புகள் ஜெர்மானியர்களைக் கடுமையாக எதிர்த்துக்கொண்டுதான் இருக்கின்றன. யூக்ரேயின் மாகாணத்தில் உள்ள முக்கிய பட்டணமாகிய கார்கோப்பை ஜெர்மானியர்கள் கைப்பற்ற முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய முன்னேற்றம் தடைப்படுத்தப்பட்டு வருகிறது. தெற்கில் ஒடெஸ்ஸாவும், வடக்கில் லெனின்கிராடும், ஜெர்மன் முன்னேற்றத்தைத் தடுத்திருக்கின்றன. வடக்கில் அதிக தூரத்தில், மூர்மான்ஸ்க் பிரதேசத்தில், எல்லாம் அமைதியாக இருக்கிறது.

### வசந்தகால யுத்தம்.

"லா ஸ்டாம்பா" என்ற இத்தாலியப் பத்திரிகை ஜெர்மனியின் பிரசாரத்தை நம்புவதாகத் தெரியவில்லை. அந்தப் பத்திரிகை எழுதுவதாவது :—

"ரஷ்யாவுக்கு எதிராக நடக்கும் போர் இன்னும் முடியவில்லை. ஏனென்றால், ஜெர்மன் துருப்புகளால் அழிக்கப்படாமலும், வளைத்துக்கொள்ளப்படாமலும் இருக்கும் ரஷ்யத்துருப்புகள் அநேகம் இருக்கின்றன. அடுத்த வசந்த காலத்தில், ரஷ்யாவின் நிலைமை மாறிவிடும். மழைகாலத்தில், ரஷ்யப்பட்டாளங்கள் சீர்திருத்தி அமைக்கப்படும். ஜெர்மன் துருப்புகளுக்கு அநேக கஷ்டங்கள் இருக்கின்றன. லட்சக் கணக்கான ஜெர்மன் சிப்பாய்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் ஏராளமானவை. அவைகளை 'சப்ளை' செய்வதற்கு போக்குவரத்து சாதனங்கள் இருக்க வேண்டும். போக்குவரத்து தொடர்ச்சி ஏற்பாடுகள் அடிக்கடி உடைக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கான யந்திர வேலைக்காரர்கள் இதை பழுதுபார்த்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் கையில் துப்பாக்கியுடன் அவர்கள் வேலை செய்யவேண்டியிருக்கிறது. ஏனென்றால், ரஷ்யத்துருப்புகள் சதா தாக்கிக்கொண்டேயிருக்கின்றன."

இந்த நிலைமையில், ஜெர்மானியர்கள் சுலபமாகத் தங்களுடைய காரியங்களைச் சாதித்து, ரஷ்யாவின் பலத்தை ஒரே அடியாக ஒழித்துவிட முயற்சிப்பது சீக்கிரத்தில் நடக்கிற காரியமாகத் தெரியவில்லை. ஹிட்லருக்குக் காரியம் சீக்கிரத்தில் முடியவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் அந்த எண்ணம் நிறைவேறும் என்று சொல்வதற்கில்லாதபடி ரஷ்ய யுத்தத்தின் தற்போதைய நிலைமை இருக்கிறது.

# அஸ்ஸாப் பட்டணம் பிடிபட்ட பின்

## இந்திய சிப்பாய்களின் திறமையான வேலை

### போக்கிரிகளின் கொள்ளை : ரோம் ரேடியோவின் பொய்

[அஸ்ஸாப் என்பது கிழக்கு ஆப்பிரிக்காவில், எரீட்ரியா பிரதேசத்தில், செங்கடலுக்கு அருகில் இருக்கும் ஒரு முக்கியமான பட்டணம். இந்தப் பட்டணம் இத்தாலியர்களிடமிருந்து பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டது. இதில் இந்தியப் படைகள் அதிக உதவி செய்தன. அஸ்ஸாபைக் கைப்பற்றிய பிறகு, அந்தப் பட்டணத்தைச் சீர்திருத்தவேண்டியது ஒரு முக்கியமான வேலையாயிருந்தது. இந்த வேலை 15-வது பஞ்சாப் பட்டாளத்தால் நன்றாகச் செய்யப்பட்டது. இது சம்பந்தமான சில ருசிகரமான சம்பவங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன :—]

அஸ்ஸாப் பட்டணத்தின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக, சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அந்தப் பட்டணத்துக்கு ஒரு மந்திரி சபை இருந்தால் எப்படி வேலை நடக்குமோ, அதைப்போல நிர்வாக வேலைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. முதல் மந்திரி செய்கிற வேலை, பட்டாளத் தளகர்த்தருக்குக் கொடுக்கப்பட்டது. அவருக்கு அடுத்ததாக உள்ள ராணுவத் தலைவர் உள்நாட்டு விவகாரங்களைக் கவனிக்கும் வேலையை ஒப்புக்கொண்டார். இதனுடன் உணவுப் பொருள் சம்பந்தமான வேலையும், யுத்தக் கைதிகளைக் கவனிக்கும் வேலையும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. இதர ராணுவத் தலைவர்களுக்கு, உள்நாட்டுப் பாதுகாப்பு, போக்குவரத்து சாதனம், சப்ளைகள், சுகாதாரம் முதலிய விஷயங்களைக் கவனிக்கும் வேலைகள் கொடுக்கப்பட்டன.

அஸ்ஸாப் பட்டணத்தில் உணவுப் பொருள்கள் கொஞ்சமாயிருந்தன. வேறொரு இடத்திலிருந்து சாமான்கள் கொண்டுவரவேண்டியதாயிருந்தது. அங்கிருந்தவர்கள் இத்தாலியப் பணத்தை வாங்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். ஆகையால் இத்தாலியர்களிடமிருந்து கிடைத்த சக்கரை மூட்டைகளைக் கொடுத்து உணவுப்பொருள்கள் வாங்க வேண்டியதாயிருந்தது.

இத்தாலியர்களுடைய கையில் அஸ்ஸாப் பட்டணம் இருந்தபோது, ராணுவ ஆட்சி தாண்டவமாடியது. பிரிட்டிஷார் கையில் சிக்கியவுடன், முனிசிபாலிடி ஏற்படுத்தி நிர்வாகம் ஒழுங்கு செய்யப்பட்டது. உத்தியோகஸ்தர்கள் இராத்திரியும் பகலுமாக கஷ்டப்பட்டு வேலை செய்தார்கள். ஒரே குழப்பமும் கலவரமுமாயிருந்த பட்டணம் நாளடைவில் ஒழுங்காய் விட்டது.

### பொய்ப் பிரசாரம்.

இந்தியத் துருப்புகள் ஜெயித்துவிட்டால், அதனால் நாட்டு மக்களுக்குப் பெரிய கஷ்டங்கள் ஏற்படும் என்று இத்தாலியர்கள் விளம்பரப்படுத்தியிருந்தார்கள். பஞ்சாப் துருப்புகள் பட்டணத்தில் பிரவேசித்தவுடன் அங்கிருந்த இத்தாலியப் பெண்களெல்லாம் பயந்து நடுங்கிக்கொண்டு இருந்தார்கள். இந்தியச் சிப்பாய்கள் முரடர்களைப்போலவும், காட்டுமிராண்டிகளைப்போலவும் நடந்துகொள்வார்கள் என்று அவர்கள் நினைத்தார்கள். அப்படி நினைத்ததெல்லாம் தவறு என்று அவர்கள் சீக்கிரம் தெரிந்துகொண்டார்கள். இந்திய சிப்பாய்கள் யாதொரு கெட்ட நடவடிக்கையும் உள்ளவர்களல்ல என்று அவர்கள் உணர்ந்த பிறகு, பட்டணத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கு அவர்கள் உதவி செய்தார்கள்.

மூன்று நாட்களுக்குள் அமைதி ஏற்பட்டது. இதற்குள் உள்ளூரிலிருந்த போக்கிரிகள் கொள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்றபடி, சண்டைக் கலவரத்தில் இவர்கள் போக்கிரித்தனம் செய்தார்கள். போக்கிரிகளை எல்லாம் நமது சிப்பாய்கள் பிடித்து ஊருக்கு நடுவில் நிறுத்தி சாட்டையினால் அடித்தார்கள். சாட்டையடி விழுந்ததும் கொள்ளையடிப்பது உடனே நின்றுவிட்டது. சாட்டையால் அடித்த ஒரு சார்ஜண்டும், மற்றொரு அவில்தாரும் அதற்குப் பிறகு அந்தப் பட்டண வாசிகளால் மிகுந்த மரியாதையுடன் நடத்தப்பட்டார்கள்!

பட்டணவாசிகள் தாங்கள் வைத்திருந்த ரேடியோ பெட்டிகள் பறிமுதல் செய்யப்படும் என்று நினைத்

## குப்பைக்காகிதத்தின் உபயோகம்.



**குப்பைக்காகிதத்தை பிரிட்டன் புதியவழியில் உபயோகிக்கிறது. அதிலிருந்து பீரங்கிக் குண்டுகளுக்கு உறைகள் செய்யப்படுகின்றன. இதற்கு முன் உலோகங்களால் உறைகள் செய்யப்பட்டன. அந்த உலோகங்கள் யுத்தத்தில் வேறுவழியில் இப்போது உபயோகப்படுகின்றன. மேலே இருக்கும்படத்தில், காகித உறைகளிலிருந்து குண்டுகள் வெளியே எடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.**

---

தார்கள். அப்படி செய்யாமல் போகவே, பிரிட்டிஷாரிடமும் இந்தியர்களிடமும், அவர்களுக்கு மதிப்பு அதிகப்பட்டது. அஸ்ஸாமிலுள்ள இத்தாலியர்களெல்லோரும் தங்களுடைய பட்டணம் கைப்பற்றப் பட்ட செய்தியை ரோம் ரேடியோவில் கேட்டார்கள். ரோம் என்பது இத்தாலியின் தலை நகரம்.

### ரேடியோ செய்தி.

ரோம் ரேடியோ செய்தி வேடிக்கையான விவரங்களைக் கொடுத்தது. நடந்த விஷயத்துக்கும், அந்த செய்திக்கும் சம்பந்தமில்லாமல் இருந்தது. அஸ்ஸாப் பட்டணம், பிரிட்டிஷ் சிப்பாய்களாலும், இந்தியச் சிப்பாய்களாலும் திடீரென்று தாக்கப்பட்டது. எதிர் பாராமல் தாக்கப்பட்டதால், யாதொரு எதிர்ப்பும் இல்லாமல், பட்டணம் சரணாகதியடைந்துவிட்டது. ஆனால் ரோம் ரேடியோ கூறியதாவது :—

ஏராளமான கப்பல்களும், ஆகாய விமானங்களும் 10-மணி நேரம் இடைவிடாமல் அஸ்ஸாப் பட்டணத்தின் மேல் வெடிகுண்டுகளைப் போட்டன. அதன் பின் அநேக பட்டாளங்கள் ஒன்றன் பின் ஒன்றாக, சமுத்திர அலைகளைப்போல, வந்து தாக்கின. இத்தாலியத் துருப்புகள் உறுதிக்கும் தைரியத்துக்கும் பேர்போனவை. ஆகையால், தைரியத்துடன் அவைகள் எதிர்த்துப் போராடின. ஆனால் கடைசியில் அவைகளால் முடியாமல் பட்டணத்தைக் கைவிட்டன.

இந்தப் பெரிய பொய்யைக் கேட்ட அஸ்ஸாப் பட்டண வாசிகள் என்ன நினைத்திருப்பார்கள்? ரோம் ரேடியோவைப்பற்றியும், இத்தாலிய பிரசாரத்தைப் பற்றியும், அவர்கள் வைத்திருந்த மதிப்பு அடியோடு போய்விட்டது.

---

# வாரச் செய்திக் குறிப்புகள்

## 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப் போர்

பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை சென்றவாரம் ஜெர்மனியின் முக்கியமான பட்டணங்களை வெடிகுண்டுகளால் தாக்கியது. ஜெர்மனி, ரஷ்யப்போரில் முழு கவனமும் செலுத்திக்கொண்டிருக்கும்போது, அந்தக் கவனத்தைத் திருப்புவதற்காக பிரிட்டிஷ் விமானங்கள் முன் தாக்கியதை விட கடுமையாக, ஜெர்மனியைத் தாக்கிக்கொண்டு வருகின்றன. சென்ற வாரம் தாக்கிய ஜெர்மன் பட்டணங்களுள் முக்கியமானது நூரம்பர்க் என்ற பட்டணம். ஹிட்லருடைய நாஜிக் கட்சியின் கூட்டங்கள் மிகுந்த ஆரவாரத்துடன் வருஷாவருஷம் இந்தப் பட்டணத்தில் கூடுவது வழக்கம். இது பவேரியா மகாணத்திலுள்ள மிகப் பெரிய பட்டணங்களுள் இரண்டாவது. இந்த யுத்தத்திற்குமுன் ஜெர்மன் விளையாட்டுச் சாமான்கள் செய்யும் பிரம்மாண்டமான தொழிற்சாலை இங்கு இருந்தது. யுத்தம் ஆரம்பித்தபிறகு, இந்த தொழிற்சாலை யுத்த ஆயுதங்கள் செய்வதற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. டாங்கிகளுக்கும், விமானங்களுக்கும், இதர யுத்த தளவாடங்களுக்கும் வேண்டிய 'ஸ்குரூ' ஆணிகள், மறைகள் முதலியன நூரம்பர்க் தொழிற்சாலையில் செய்யப்படுகின்றன. நூரம்பர்க்கில் மற்றொரு முக்கியமான தொழிற்சாலை இருக்கிறது. சீமன்ஸ்—ஷுகர்ட் தொழிற்சாலை என்று அதற்குப் பெயர். யுத்த விமானங்களுக்கு மின்சார முஸ்தீப்பு சாமான்கள் இந்த தொழிற்சாலையில்தான் செய்யப்படுகின்றன.

நூரம்பர்க் தொழிற்சாலைப் பிரதேசங்களைத் தாக்குவதற்காக, 300 பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் புறப்பட்டன. சுமார் 1,200 மைல் தூரம் பிரிட்டனிலிருந்து பறந்துசென்று, நூரம்பர்க், பவேரியாவில் சில முக்கியமான இடங்கள், ரைன்லாந்து பிரதேசம், வடமேற்கு ஜெர்மனி இவைகளின்மேல் வெடிகுண்டுமழை பொழிந்தன. முதலில் அநேக வெடிகுண்டுகள் போட்டவுடன், நூரம்பர்க்கின் சில பாகங்களில் நெருப்புப் பிடித்துக்கொண்டு எரிந்தது. மேலிருந்து ஆகாய விமான ஓட்டிகளுக்குச் சில காட்சிகள் புலப்பட்டன. நூரம்பர்க் பட்டணம் நெருப்பு மயமாய் இருந்தது. கட்டடங்களின் கூரைகள் அப்படியே உள்ளே விழுந்துவிட்டன. தொழிற்சாலைக் கட்டடங்கள் இடிந்து சாய்ந்துவிட்டன. நெருப்புக்கு இரையான கட்டடங்களில் சில மொட்டைச் சுவர்களுடன் நின்றன. நெருப்புச் சுவாலைகள் வெகுதூரம் பரவியிருந்தன. நூரம்பர்க்கின் ரெயில்வே சாலைகளும், தொழிற்சாலைகளும், அதிக வெடிகுண்டுகளுடன் நடு ராத்திரிக்குப்பின் வந்த பிரிட்டிஷ் விமானங்களால், பலமாகத் தாக்கப்பட்டன.

இந்த யுத்தம் ஆரம்பித்தபிறகு செய்யப்பட்ட மிகக் கடுமையான தாக்குதல்களில் இது ஒன்று என்று சொல்லப்படுகிறது.

### தாக்கப்பட்ட பட்டணங்கள்

இன்னும் பல இடங்களைச் சென்றவாரத்தில் பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் தாக்கியிருக்கின்றன. அவைகளின் பெயர் பின்வருமாறு :—

தூசல்தார்ப், கலோன், பலோன், பிரெமென், ரூர், ராட்டர்டம், ஆஸ்டெண்டு, போர்தோ, மாசின் கார்ப்.

சென்றவாரம், ஜெர்மன் விமானங்கள் பிரிட்டனில் சில இடங்களில் வெடிகுண்டுகளைப்போட்டன. கிழக்கு இங்கிலாந்தில் இரண்டு இடங்களில் வெடிகுண்டுகள் போடப்பட்டன. சிறிது சேதம் விளைவிக்கப்பட்டது. பலர் கொல்லப்பட்டார்கள்; சில எதிரி விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன.

1941-ம் ஆண்டு செப்டெம்பர்மீ ஜெர்மன் விமான தாக்குதல்களினுல் கொல்லப்பட்டவர்களுடைய கணக்கு சென்றவாரம் வெளியிடப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| கொல்லப்பட்டவர்கள் | .. .. | 217 |
| காய மடைந்தவர்கள் | .. .. | 269 |
| மொத்த சேதம் | .. | 486 |

சென்ற ஒரு வருஷத்தில் ஜெர்மன் விமானத் தாக்குதல் சேதத்தைப்பற்றிய விவரமும் வெளியிடப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| கொல்லப்பட்டவர்கள் | .. .. | 18,698 |
| காய மடைந்தவர்கள் | .. .. | 20,451 |
| மொத்த சேதம் | .. | 39,149 |

## 2. இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக்கடல்.

இத்தாலி நீண்டகாலம் யுத்தம் செய்யும்படியான நிலைமைக்குத் தயாராயிருக்கவேண்டும் என்று பாரிஞசி என்ற பாஸிஸ்டு கட்சித்தலைவர் கூறினுர். ஆனல் இத்தாலிய மக்கள் யுத்தம் இனிமேல் நடப்பதை விரும்பவில்லை. இத்தாலியினுடைய நிலைமை வரவர மோசமாய்க்கொண்டிருக்கிறது என்று அவர்கள் தெரிந்துகொண்டார்கள். இத்தாலியைத் தன்னுடைய காரியத்துக்கு ஜெர்மனி உபயோகித்துக்கொண்டதே தவிற, இத்தாலியினுடைய நன்மையைக் கொஞ்சங்கூட ஜெர்மனி கவனிப்பதில்லை என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. ரோம் ரேடியோவிலிருந்து நடைமுதல் சமாச்சாரங்களைப் பற்றி ஒருவர் சொல்லிக்கொண்டு வரும்போது, வேறெரு குரல் அதில் குறுக்கிட்டு, "என் இத்தாலியை ஒரு அயல்நாட்டாருக்கு விற்றுவிட்டீர்கள் ?" என்று கேட்டது. ஹிட்லர் இத்தாலியை விலைக்கு வாங்கின அடிமையைப்போல் நடத்தி வருவது இத்தாலிய மக்களுக்கு நன்ருகப் புலப்பட்டுவிட்டது. இத்தாலியினுடைய தற்கால பரிதாபகரமான நிலைமையும், நாட்டுமக்கள்படும் கஷ்டமும், யுத்தத்திலிருந்து விலகி சமாதானம் செய்துகொள்ளவேண்டும் என்ற உணர்ச்சி பரவியிருப்பதும், இந்த இதழில் வெளியிடப்பட்டிருக்கும் வேறெரு கட்டுரையில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

### புதிய வெடிகுண்டு.

ஆப்பிரிக்காவில், தோப்ரூக் எதிரிகளை எதிர்த்து நிற்கிறது. அதனுடைய பாதுகாப்புகளை உடைப்பதற்கு எதிரிகள் செய்த முயற்சி பலிக்கவில்லை. புதிய வெடிகுண்டுகளை தோப்ரூக் பிரதேசத்தில் அவர்கள் எறிகிருர்கள். இந்த வெடிகுண்டுகள் விழுந்த இடத்தைச் சுற்றி சற்று தூரத்தில் உள்ள எல்லோரும் உடனே விஷப்புகையினுல் கொல்லப்படுவார்கள். இப்படிப்பட்ட 200 வெடிகுண்டுகள் தோப்ரூக் பிரதேசத்தில் போடப்பட்டன. ஆனல் பிரிட்டிஷ் துருப்புகள் தூரமான இடத்தில் மறைந்துகொண்டதால் யாதொரு சேதமும் ஏற்படவில்லை. பிரிட்டிஷ் படைகள் முன்னேறி எதிரிகளைத் தாக்கி அவர்களுக்குப் பலத்த சேதத்தை உண்டாக்கியிருக்கின்றன. பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பென்காசி, டிரிபோலி முதலிய இடங்களின் மேல் வெடி குண்டுகளைப்போட்டன.

மத்திய கிழக்கு அரங்கத்தில் இந்தியத் துருப்புகள் திறமையாகச் சண்டை செய்துவருகின்றன. இந்தத் துருப்புகளை காஷ்மீர் மகாராஜா அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

## 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அமெரிக்கா யுத்த நிலைமையின் நெருக்கடியை நன்ருகத் தெரிந்துகொண்டிருக்கிறது. ரஷ்யாவுக்குத் தன்னுலான உதவியெல்லாம் கொடுத்தால் தான், ஹிட்லரிசத்தை அழித்து அமெரிக்காவையும் காப்பாற்றலாம் என்ற உணர்ச்சி நாட்டு மக்களிடையே அதிகமாகப் பரவியிருக்கிறது. வாடகையாகவும், கடனுகவும் யுத்த சாமான்கள் கொடுத்துவரும் திட்டத்தில் ரஷ்யாவும் சேர்க்கப்படவேண்டும் என்ற முயற்சி வெற்றிபெற்றது. இதைச் சிலர் ஆட்சேபித்தார்கள். அமெரிக்க சட்டசபையில் பெரும்பான்மையானவர்கள் ரஷியாவுக்கு உதவி செய்யவேண்டும் என்ற அபிப்பிராயம் உடையவர்கள். ஆகையால் ரஷ்ய உதவித் தீர்மானம் நிறைவேறிவிட்டது. அமெரிக்காவில் யுத்த மனப்பான்மை அதிகரித்து வருவதைப்போல மத்திய அமெரிக்க நாடுகளினும், தெற்கு அமெரிக்க நாடுகளிலும் ஹிட்லரிசத்தை ஒழிப்பதற்கு யுத்தத்தில் ஈடுபடவேண்டும் என்ற உணர்ச்சி பரவிவருகிறது. அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபடுமானல் இந்த நாடுகளும் அமெரிக்காவைப் பின்பற்றி நடக்கும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

### அபாயத்தின் நெருக்கம்.

அட்லாண்டிக் கடலில் முன் ஜாக்கிரதையாக இருப்பதற்கு அமெரிக்க யுத்தக் கப்பல்களுக்கு யுத்த தளவாடங்கள் பூட்டவேண்டுமென்ற அபிப்பிராயம் பலப்பட்டு வருகிறது. இதைப்பற்றி இருக்கும் தடை உத்தரவை உடனே நீக்கிவிடவேண்டுமென்று அமெரிக்க உத்தியோகஸ்தர்கள் வற்புறுத்திக் கூறுகிருர்கள். அமெரிக்கா அரசியல் மந்திரி மிஸ்டர் கார்டெல் ஹல், அபாயம் நமக்கு அருகில் வந்துவிட்டதென்றும் அட்லாண்டிக் கடலிலும் இதர கடல் பிரதேசங்களிலும் ஹிட்லர் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சிப்பதைத் தடுக்கவேண்டுமென்றும் கூறியிருக்கிருர்.

## 4. ரஷ்யாவும், பின்லாந்தும்.

சென்ற வாரம், ரஷ்யாவில் பிரம்மாண்டமான போர் நடந்திருக்கிறது. ரஷ்யாவின் தலைநகரமாகிய மாஸ்கோவைப் பிடிப்பதற்கு, ஜெர்மன் துருப்புகள் பெரு முயற்சி செய்துவருகின்றன. மார்ஷல் திமோ ஷெங்கோவின் தலைமையின்கீழ் ரஷ்யத்துருப்புகள் கடுமையாக எதிர்த்துப் போராடுகின்றன. வியாஸ்மா, பிரியான்ஸ்க், ஓரல், மாரியுபோல், ஆகிய பட்டணங்களிலிருந்து ரஷ்யத்துருப்புகள் வெளியேறிவிட்டன. மாஸ்கோவுக்கு மேற்கில் 60 மைல் தூரத்தில் மார்ஷல் திமோ ஷெங்கோவின் துருப்புகள் ஜெர்மன் துருப்புகளைத் தடுத்துக்கொண்டிருக்கின்றன. போரோடினே என்ற இடத்தில் கடுமையான சண்டை நடக்கிறது. இதே இடத்தில்தான் அநேக வருஷங்களுக்கு முன் நெப்போலியன் என்ற பிரபல பிரெஞ்சுத்தலைவர் தோல்வியடைந்தார். அவரும், ஹிட்லரைப்போல, ரஷ்யாவைக் கைப்பற்றவேண்டும் என்ற பேராசையுடன் வந்தவர். அவருடைய துருப்புகளும், ஹிட்லருடைய துருப்புகளைப்போல, மழைக் காலத்தில் ரஷ்யாவில் அகப்பட்டுக்கொண்டன. ரஷ்யாவின் கடுங்குளிரைத் தாங்கமுடியாமல் அப்போது கணக்கில்லாத சிப்பாய்கள் இறந்து போனுர்கள். அதேமாதிரியான நிலைமை ஹிட்லருடைய துருப்புகளுக்கும் ஏற்படும்படியாக மழைக்காலம் ரஷ்யாவில் ஆரம்பித்துவிட்டது.

### ஜெர்மன் துருப்புகளுக்குச் சேதம்.

தீவிரமான குளிரும் மழையும் ஆரம்பிப்பதற்குள் மாஸ்கோவை பிடித்துவிடவேண்டுமென்பது ஹிட்லர்

ருடைய நோக்கம். இதற்காக ஏராளமான துருப்புகள் மத்தியப்பகுதிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த ஜெர்மன் துருப்புகளுக்குக் கடுமையான சேதம் ரஷ்யத் துருப்புகளால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்த போரில் மாத்திரம் 13,000 ஜெர்மன் சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள், 89 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. சென்ற செவ்வாய்க்கிழமை மாஸ்கோ நகரத்துக்கு அருகில் எட்டு ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான ஜெர்மன் சிப்பாய்களின் பிரேதங்கள் யுத்தகளத்தில் சிதறிக்கிடக்கின்றன. ஏராளமான ஜெர்மன் டாங்கிகள், மோட்டார் லாரிகள், மோட்டார் சைகில்கள் நாசமாக்கப்பட்டுக் கிடக்கின்றன. மாஸ்கோவுக்கு வடக்கில் இருக்கும் காளினின் என்ற இடத்துக்குச் சண்டை பரவியிருக்கிறது. மாஸ்கோவின் வெளிப் பாதுகாப்புகளை எதிரிகள் உடைத்திருப்பதாகத் தெரிகிறது. ரிசேவ் என்ற இடம் எதிரிகளால் கைப்பற்றப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுகிறது. மாஸ்கோவுக்குத் தென்மேற்கில் இருக்கும் மேஜேயிஸ்க் என்ற பட்டணத்துக்கு வெளியில் தீவிரமான யுத்தம் நடைபெறுகிறது. ரஷ்யர்கள் 10,000 ஆகாய விமானங்களை யுத்தமுனைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

தெற்கில் அசோவ் கடலின் வடக்கில் ஜெர்மானியர்களின் முன்னேற்றம் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. வடக்கில் லெனின் கிராட் பிரதேசத்தில் ஜெர்மானியர்கள் முன்னேறிய இடங்களிலிருந்து பின்தள்ளப்பட்டார்கள்.

### மாஸ்கோவில் பனியும், குளிரும்.

இந்தப்பிரதேசங்களில் நடக்கும் யுத்தத்தைவிட மாஸ்கோவில்தான் கடுமையாகவும், மும்முரமாகவும் போர் நடக்கிறது. ரஷ்ய சிப்பாய்கள் மிகுந்த தைரியத்தோடும், பிடிவாதத்தோடும், மனவுறுதியோடும் போர்புரிகிறார்கள். மழைக்காலத்திலும், குளிர் காலத்திலும், ஜெர்மன் சிப்பாய்களைவிட அவர்கள் நன்றாகப்போர்புரிவார்கள். இப்போது மாஸ்கோவில் பனிக்கட்டிவிழ ஆரம்பித்திருக்கிறது. ரோட்டுகளும், காடுகளும், பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கின்றன. இந்தக் கடுங்குளிரில் வெப்பமான ஆடைகளும், நல்ல உணவும், பலமான தேகக்கட்டும் உள்ள சிப்பாய்கள்தான் நன்றாகப் போர்செய்ய முடியும். ரஷ்யத்துருப்புகளுக்கு இந்த சௌகரியங்களெல்லாம் இருக்கின்றன.

மாஸ்கோவைக் கைப்பற்ற ஜெர்மானியர்களால் முடியாது என்று லோசோவ்ஸ்கி என்ற பிரபல ரஷ்யத்தலைவர் கூறுகிறார். ஒவ்வொருநாளும் ஜெர்மானியர்களுடைய முன்னேற்றம் குறைந்து கொண்டு வருகிறது; ஒவ்வொருநாளும் எதிரிக்கு ஏராளமான சேதம் ஏற்பட்டுவருகிறது என்று அவர் நிலைமையை விளக்கிக்காட்டுகிறார். மேலும், அவர் கூறுவதாவது :—

"ஆகாய விமான பலத்தில் ஜெர்மானியர்கள் இன்னும் மேன்மையடையவில்லை. ரஷ்ய ஆகாய விமானப்படை ஜெர்மன் படையைவிட அதிகபலம் பொருந்தியது. ஒரே ஒருநாளில், அதாவது சென்ற திங்கட்கிழமை 122 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதிலிருந்து ரஷ்ய விமானப் படையின் பலம் தெரிகிறது. இதல்லாமல், ரஷ்ய போக்குவரவு சாதனங்கள் நன்றாக வேலைசெய்து வருகின்றன. பெண்கள், குழந்தைகள், வயது சென்றவர்கள் இவர்கள் யாதொரு கஷ்டமும் அசௌகரியமும் இல்லாமல் வெளியில் உள்ள பட்டணங்களுக்கு அப்புறப்படுத்தப்படுகின்றனர்."

ரஷ்ய மத்தியப் பகுதியில் நடக்கும் யுத்தத்தைப் பற்றி இன்னும் சில விவரங்கள் ஒரு தனிக்கட்டுரையில் இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

### ரஷ்ய-ஜப்பான் ஒப்பந்தம்.

ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. மஞ்சுகுவோவுக்கும் மங்கோலியாவுக்கும் எல்லை எங்கு இருக்கவேண்டும் என்பதைப்பற்றி அந்த ஒப்பந்தத்தில் ஒரு ஒற்றுமையான முடிவு குறிக்கப்பட்டிருக்கிறது. இது அதிக காலமாக ஜப்பானுக்கும் ரஷ்யாவுக்கும் சச்சரவை உண்டாக்கிக்கொண்டிருந்தது. இதைப்பற்றிய பத்திரங்கள் சென்ற புதன்கிழமை இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளாலும் கையெழுத்திடப்பட்டது. வடக்கில் பூர்நார் ஏரியிலிருந்து தெற்கில் அமிர்ஷான் என்ற இடம் வரைக்கும் 200 மைல் தூரத்தில் ஒரு எல்லை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த யுத்த நெருக்கடியான சமயத்தில் ரஷ்யாவும் ஜப்பானும் ஒப்பந்தம் செய்து கொண்டது ஒரு நல்ல அறிகுறியாகும் என்று நம்பிக்கை கொள்ளலாமா என்பதைச் சொல்லமுடியாது.

ஜெர்மானியர்கள், காளினின், காளுகா என்ற இரண்டு இடங்களையும் பிடித்துவிட்டதாகக் கூறுகிறார்கள். நிலைமை மோசமாயிருக்கிறது என்று ரஷ்யர்கள் கூறுகிறார்கள். ரஷ்யாவினுடைய புதிய தலைநகரம், மாஸ்கோ தலைநகரத்திற்கு 400 மைலுக்குக் கிழக்கில் உள்ள காசான் என்ற இடத்திற்கு மாற்றப்படலாம் என்று சொல்லப்படுகிறது. அயல்நாட்டு ஸ்தானீக உத்தியோகஸ்தர்கள் மாஸ்கோவை விட்டுச் செல்கிறார்கள் என்று தெரிகிறது.

## 5. பால்கன்ஸ், துருக்கி, இரான் முதலியன

இன்னும் அதிகமாகக் குரோம் வேண்டும் என்று ஜெர்மனி துருக்கியைக் கேட்டிருக்கிறது. துருக்கி கொடுக்கமுடியாதென்று மறுத்திருக்கிறது. ஜெர்மன் தூதுக்கோஷ்டியின் தலைவரான டாக்டர் கிளாடியஸ், வியாபாரப் பேச்சுகளை நிறுத்திவிடுவேன் என்று பயமுறுத்தியிருக்கிறார். துருக்கி-ஜெர்மன் வியாபார ஒப்பந்தத்தில் அதிகக் குரோம் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது என்று ஜெர்மனி கூறுகிறது. அம்மாதிரி குறிப்பிடப்படவில்லை என்று துருக்கி கூறுகிறது. டாக்டர் கிளாடியஸ் தான் வந்த காரியம் முடியவில்லை யாகையால் துருக்கியிலிருந்து பர்லினுக்குச் சென்றுவிட்டார்.

சிரியாவிலும் பாலஸ்தீனத்திலும் உள்ள துருப்புகளையும் யுத்த ஏற்பாடுகளையும், மத்திய கிழக்கரங்கத்தின் பிரதம தளகர்த்தரான ஜெனரல் ஆக்கின்லெக் மேற்பார்வையிட்டார்.

## 6. கப்பல் நிலை

சென்ற வாரம் எதிரிகளுடைய கப்பல்கள் பல பிரிட்டிஷ் படைகளால் தாக்கப்பட்டன. நார்வேயின் மேற்குக் கரையோரத்திலுள்ள கப்பல்சாலைகளின் மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. 1,000 டன் எடையுள்ள ஒரு சப்ளை கப்பல் நெருப்புப் பிடித்துக் கொண்டு எரிந்தது. 1,500 டன் எடையுள்ள ஒரு கப்பலின்மேல் நேராக வெடிகுண்டு விழுந்து பழுதாய்விட்டது; கப்பலோட்டிகள் முதலியவர்கள் அந்தக் கப்பலைக் கைவிட்டுவிட்டுப் போய்விட்டார்கள். 2,000 டன் எடையுள்ள இரண்டு சப்ளை கப்பல்கள் தாக்கப்பட்டன. 3,500 டன் எடையுள்ள ஒரு எதிரி கப்பல், சப்மரீனால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது. மத்தியதரைக்கடலில் மூன்று எதிரிக் கப்பல்கள் பலமாகத் தாக்கப்பட்டன.

## 7. தூரக் கிழக்கு அரங்கம்

சீனாவும் ஜப்பானும் போர் நடத்திக்கொண்டே இருக்கின்றன. யாங்ட்ஸீ பிரதேசத்தில் இச்சாங் துறை முகத்தில் பிரவேசிக்க முயற்சித்த சீனப் பட்டாளங்களின் மேல் விஷப் புகை வெடி குண்டுகளை ஜப்பானியர்கள் எறிந்தார்கள். அதனால் 4 சீனப் பட்டாளங்கள் உயிர் துறந்தன. இதற்கு முன் சீனர்கள் ஜப்பானியர்களைச் சில இடங்களில் தோற்கடித்திருக்கிறார்கள். இழந்த பெருமையை மீண்டும் அடைவதற்காக விஷப் புகையை ஜப்பானியர்கள் உபயோகித்ததாகத் தெரிகிறது. விஷப்புகையை எதிர்ப்பதற்கு சீனர்களிடம் ஒன்றுமில்லையாகையால், இச்சாங் பட்டணத்தை விட்டு சீனர்கள் வெளியேறி விட்டார்கள். சீனா அமெரிக்காவின் உதவியை நாடி

யிருக்கிறது. பர்மா-யூனன் ரயில்வே மார்க்கமாக அமெரிக்க உதவி அதற்கு வரும்.

ஜப்பான் ரஷ்யாவைத் தாக்குவதற்கு முயற்சி செய்யப்போவதாக சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஜப்பானில் முக்கியமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஜப்பானிய மந்திரிசபை ராஜிநாமா செய்து விட்டது. ஜப்பானிய முதல் மந்திரி, பிரின்ஸ் கோனுேயி, மற்ற மந்திரிகளை அழைத்து மந்திரி சபை ராஜிநாமாசெய்யவேண்டிய காரணங்களை விளக்கிக் கூறினார். செய்யவேண்டிய முக்கியமான காரியங்களைப்பற்றி, மந்திரி சபையில் அபிப்பிராயபேதம் இருந்தது. இந்த மந்திரி சபை புதிதாக மூன்று மாதங்களுக்கு முன்தான் நியமிக்கப்பட்டது. புதிய மந்திரி சபை கூடியசீக்கிரம் அமைக்கப்படும் என்று தெரிகிறது.

புதிய மந்திரி சபையின் முதல் வேலை ரஷ்யாவைத் தாக்குவதாயிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இதுமாத்திரமல்லாமல், ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்கும் உள்ள நெருக்கடியான நிலைமை அதிகரித்திருக்கிறது. ஜப்பானிய கப்பற்படை யுத்தத்திற்குத் தயாராயிருக்கிறது என்றும், ஜப்பானிய பட்டாளங்கள் தயாராயிருக்கவேண்டுமென்று எச்சரிக்கை செய்வதாகவும், ஒரு ஜப்பானிய உத்தியோகஸ்தர் தெரிவித்தார். அமெரிக்காவின் தலைவர், மிஸ்டர் ரூஸ்வெல்ட், தன்னுடைய ராணுவத்தலைவர்களோடு நிலைமையைப்பற்றிக் கலந்து ஆலோசித்து வருகிறார்.

ரஷ்யாவின் தலைநகரமாகிய மாஸ்கோவைவிட்டு நீங்கும்படி ஜப்பானிய ஸ்தானீக உத்தியோகஸ்தர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

## 8. விஷி,

விஷி அரசாங்கம் வழக்கம்போல ஹிட்லருக்கு அடிபணிந்து நடந்து வருகிறது. மார்ஷல் பீத்தான், அட்மிரல் தார்லான், லவால் முதலியவர்கள் ஜெர்மனிக்கு அனுகூலமாக நடந்துகொள்ளுகிறார்கள். ரஷ்யாவில் இப்படிப்பட்ட துரோகிகள் இல்லாததினால் ரஷ்யா இன்னும் எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறது என்று மாஸ்கோ ரேடியோ சென்றவாரம் அறிவித்தது.

## 9. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்.

ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் அநியாயங்கள் இன்னும் நடக்கின்றன. சர்பியாவில் இதுவரை கொல்லப்பட்டவர்கள் சுமார் 3½ லட்சம் பேர். சர்பிய தேச பக்தர்கள் ஆடு மாடுகள் அடைக்கும் வண்டிகளில் அடைக்கப்பட்டு காற்றில்லாமல் உயிர் துறந்தார்கள். கிரீசில் நாட்டு மக்களுக்கும் எதிரிகளுக்கும் சதா சச்சரவும் சண்டையும் நடந்து வருகின்றன.

செக்கோஸ்லாவாக்கியாவில், ஹேட்ரிக் என்பவர் கவர்னரான பிறகு 255 செக்கியர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், 44 செக்கியர்கள், கெஸ்டாபோ என்ற ஜெர்மன் ரகசியப் பொலீஸ்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்கள். 8 செக்கியர்கள் சென்றவாரம் ஆயுதங்கள் வைத்திருந்ததற்காகவும், ராஜ துரோகத்திற்காகவும் கொல்லப்பட்டார்கள்.

## 10 நடுநிலைமை நாடுகள்.

கிரீன்லாந்தில், ஒரு ரகசிய ஜெர்மன் ரேடியோ ஸ்டேஷனை அதிகாரிகள் கண்டு பிடித்து கைப்பற்றிக் கொண்டார்கள். ஒரு போர்ச்சுகல் கப்பலை ஜெர்மன் சப்மரீன் தாக்கியிருக்கிறது. சுவிட்சர்லாந்தில், ஒரு ஊர்பேர் தெரியாத ஆகாய விமானம் வெடிகுண்டுகளைப் போட்டுவிட்டு ஓடிப்போய்விட்டது. இதனால் ஒரு வீடு இடிந்து விழுந்தது. 3 பேர் கொல்லப்பட்டார்கள். தாக்கப்பட்ட கிராமம் தெற்கு ஜெர்மனியின் ஓரத்தில் இருக்கிறது.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் ஆபீஸர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.